**தமிழ்நாடு அரசு**
**சுருக்கம்**

ஆதிதிராவிடர் நலம்-கல்வி-விடுதிகள்-2003-2004 ஆம் கல்வி ஆண்டில் மாவட்ட தலைமையிடங் களிலுள்ள ஆதிதிராவிடர் நல வீடுதிகளில் கூடுதலாக 1000 (ஆயிரம்) மாணவ/மாணவியர்களை சேர்த்துக் கொள்ள அனுமதி ஆணை வழங்கப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (ஆதிந.4) துறை

அரசாணை (நிலை) எண். 192 நாள் : 20.8.2003

படிக்கப்பட்டது :

1. ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் கடித எண்.ந.க.த1/54219/2002, நாள்:29.04.2003
2. ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் கடித எண்.பி1/பிடி எல்.1/2003, நாள்:17/04/2003

ஆணை:

ஆதிதிராவிடர் நலத் துறையின் கீழ், ஆதிதிராவிட மாணவ/மாணவியர்களுக்காக 1076 நல விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் தேவை மற்றும் நிதி நிலைமைக்கேற்ப புதிய விடுதிகளை அரசு ஏற்படுத்தி வந்தது இருப்பினும் 1999-2000 ஆம் கல்வி ஆண்டு முதல் மாநிலத் திட்டக் குழுவின் பரிந்துரைப்படி நிதி நிலைமையைக் கருதி புதிய நலவிடுதிகள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. மாவட்ட தலைமையிடங்களில் செயல்படும் நலவிடுதிகளில் தங்கிப் பயில விண்ணப்பம் செய்யும் ஏழை கிராமப்புற ஆதிதிராவிட மாணவ/மாணவியர் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, இந்த ஆண்டு இந்த விடுதிகளில் கூடுதலாக 1000 (ஆயிரம்) மாணவ/மாணவியர்கள் சேர்த்துக் கொள்ள அனுமதி அளிக்கப்படுமென மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் 22.04.2003 அன்று சட்டப் பேரவையில் மானியக் கோரிக்கை விவாதத்திற்கு பதிலளிக்கும்போது புதிய அறிவிப்புச் செய்தார்கள்.

2. மேற்கண்ட அறிவிப்பு குறித்து ஆதிதிராவிடர் நல இயக்குநருடன் கலந்தாலோசிக்கப்பட்டது. ஆழ்ந்த ஆய்வுக்குபின்பு, 2003-2004 ஆம் கல்வி ஆண்டில் இவ்வாணையின் இணைப்பில் கண்டவாறு மாவட்டத் தலைமை

இடங்களில் இயங்கிவரும் ஆதிதிராவிடர் நலக் கல்லூரி/முதுகலைப்பட்டதாரி விடுதிகளில் கூடுதலாக 1000 (ஆயிரம்) மாணவ/மாணவியர்களை சேர்த்துக் கொள்ள அனுமதி அளித்து அரசு ஆணை வழங்குகிறது. இதனால் ஏற்படும் கூடுதல் செலவினம் ரூபாய்.41,53,500/- (ரூபாய் நாற்பத்தி ஒரு லட்சத்தி ஐம்பத்தி மூன்று ஆயிரத்து ஐநூறு மட்டும்) தொடர் செலவினம் ரூபாய்.41,07,500+தொடரா செலவினம் ரூபாய்.46,000/-க்கு அரசு ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குகிறது. கூடுதலாக சேர்க்கப்படுபவர்களுக்கு தற்போதுள்ள இடவசதிகளையே பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் ஆணையிடுகிறது.

3. மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினங்கள் கீழ்கண்ட கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்பட வேண்டும்.

ஹநு விடுதிகள்
" 2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏணைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்-01 ஆதிதிராவிடர் நலன்-227 கல்வித் திட்டத்தில் சேராதது- ஹநு -மாணவர் இல்லங்கள்" - 24-பொருள்களும், வழங்கலும் 67-உணவளிக்கும்/உணவுச் செலவுகள் - 99 பல்வகை."

முனு மாணவர் இல்லங்கள்

" 2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏணைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்-01 ஆதிதிராவிடர் நலன்-227 கல்வித் பத்தாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் - ஐஐ- மாநிலத்திட்டம் - முனு -மாணவர் இல்லங்கள்" - 24-பொருள்களும், வழங்கலும் 67-உணவளிக்கும்ராவிடர், பழங்குடியினர் ஏணைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்-01 ஆதிதிராவிடர் நலன்-227 கல்வித் பத்தாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் - ஐஐ- மாநிலத்திட்டம் - முனு -மாணவர் இல்லங்கள்" - 24-பொருள்களும், வழங்கலும் 67-உணவளிக்கும்/உணவுச் செலவுகள் - 99 பல்வகை."

முநு முதுகலைப்பட்டதாரி விடுதிகள்

" 2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏணைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்-01 ஆதிதிராவிடர் நலன்-227 கல்வித் பத்தாவது ஐந்தாண்டு திட்டப்பணிகள் - முநு - ஆதிதிராவிடர் நல பட்ட மேற்படிப்பு மாணவர் இல்லத்தை தொடங்குதல்" - 24-பொருள்களும், வழங்கலும் 67-உணவளிக்கும்/உணவுச் செலவுகள் - 99 பல்வகை."

4. இக்கூடுதல் செலவினங்களை 2003-2004 ஆம் ஆண்டுக்கான திருத்திய/இறுதி நிதியொதுக்க கணக்கில் சேர்ப்பதற்குரிய செயற்குறிப்புகளை உரிய நேரத்தில் தவறாது நிதித்துறைக்கு அனுப்புமாறு ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. இந்த அரசு ஆணை நிதித்துறையின் இசைவுடன் (அ.சா.கு.எண்.438னுளு/(ஏசூஞ)/03 நாள்.20.08.2003) வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ப.செல்வம்,
அரசுச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர்,ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை-5
இயக்குநர், பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5
சம்பள கணக்கு அலுவலகம், சென்னை-5/35
அனைத்து மாவட்ட கருவூல அதிகரிகள்
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-6/18/35
நிதித்துறை, சென்னை-9
முதலமைச்சர் அலுவலம், சென்னை-9
அமைச்சர் (ஆதிந) அலுவலகம், சென்னை-9
உதிரி நகல்கள்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

(பெ. தங்கவேலு)
சென்னை-9
உதிரி நகல்கள்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

(பெ. தங்கவேலு)

---

அரசு ஆணை நிலை எண். 192, ஆதி (ம)பந துறை, நாள்: 20/08/2003

இணைப்பு

ஆதிதிராவிடர் நல மாணவ/மாணவியர் விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையை கூடுதலாக உயர்த்துதல் - விவரங்கள்

| வ.எண். | மாவட்டம் | ஹநு விடுதிகள் | | முனு விடுதிகள் | | | முநு விடுதிகள் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கல்லூரிவிடுதிகள் | இடங்கள் | கல்லூரி விடுதிகள் | இடங்கள் | முதுகலைப் பட்டதாரி விடுதிக | இடங்கள் விடுதிகள் | விடுதிகள் | இடங்கள் |

| | | | | | | ள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | சென்னை | 1 | 30 | . . | . . | . . | . . | 1 | 30 |
| 2. | வேலூர் | 4 | 55 | . . | . . | . . | . . | 4 | 55 |
| 3. | விழுப்புரம் | 2 | 60 | . . | . . | . . | . . | 2 | 60 |
| 4. | நாகப்பட்டி னம் | 1 | 25 | . . | . . | . . | . . | 1 | 25 |
| 5. | திருவாரூர் | 2 | 30 | . . | . . | . . | . . | 2 | 30 |
| 6. | தஞ்சாவூர் | 2 | 30 | . . | . . | . . | . . | 2 | 30 |
| 7. | திருச்சி | 2 | 100 | . . | . . | 1 | 25 | 3 | 125 |
| 8. | அரியலூர் | 1 | 30 | . . | . . | . . | . . | 1 | 30 |
| 9. | சேலம் | 3 | 100 | . . | . . | . . | . . | 3 | 100 |
| 10. | தர்மபுரி | 3 | 50 | . . | . . | . . | . . | 3 | 50 |
| 11. | ஈரோடு | 1 | 30 | . . | . . | . . | . . | 1 | 30 |
| 12. | நீலகிரி | 1 | 10 | . . | . . | . . | . . | 1 | 10 |
| 13. | இராமநாதபு ரம் | 1 | 25 | . . | . . | . . | . . | 1 | 25 |
| 14. | புதுக்கோட் டை | 1 | 15 | . . | . . | . . | . . | 1 | 15 |
| 15. | விருதுநகர் | 1 | 20 | . . | . . | . . | . . | 1 | 20 |
| 16. | திண்டுக்கல் | 1 | 60 | 1 | 35 | . . | . . | 2 | 95 |
| 17. | மதுரை | 4 | 65 | 1 | 20 | 1 | 25 | 6 | 110 |
| 18. | சிவகங்கை | 2 | 20 | 2 | 20 | . . | . . | 4 | 40 |
| 19. | கோயமுத் தூ ர் | 3 | 100 | . . | . . | . . | . . | 3 | 100 |
| 20. | திருநெல்வே வலி | 2 | 20 | . . | . . | . . | . . | 2 | 20 |
| மொத்தம் | | 38 | 875 | 4 | 75 | 2 | 50 | 44 | 1000 |

ப.செல்வம்,
அரசுச் செயலாளர்

/உண்மை நகல்/

(பெ.தங்கவேலு)
அரசு சார்புச் செயலாளர்

/உண்மை நகல்/

(பெ.தங்கவேலு)
அரசு சார்புச் செயலாளர்